**இந்த நாள்**

- பராபவ வருடம் ஆடி மாதம் 30-ம் நாள். சனிக்கிழமை. வளர்பிறை.
- திதி: திருதியை மாலை 5.29 மணி வரை; அதன் பிறகு சதுர்த்தி.
- நட்சத்திரம்: உத்திரம் இரவு 3.25 மணி வரை; அதன் பிறகு அஸ்தம்
- யோகம்: சித்த யோகம்.
- சூலம்: கிழக்கு; பரிகாரம்: தயிர்.
- நல்ல நேரம்: காலை 7.45 - 8.45; மாலை 4.45 - 5.45 மணி வரை.
- ராகு காலம்: காலை 9.00 - 10.30 மணி வரை.
- எமகண்டம்: மதியம் 1.30 - 3.00 மணி வரை.
- சந்திராஷ்டமம்: சதயம்.

**வானிலை**

| இன்று | | நாளை | |
|---|---|---|---|
| அதிகபட்சம் | குறைந்தபட்சம் | அதிகபட்சம் | குறைந்தபட்சம் |
| 35 C / 95.0 F | 27 C / 80.6 F | 35 C / 95.0 F | 27 C / 80.6 F |

ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்




கரூர் மாநகராட்சி

# நீச்சல் குளத்தில் பயிற்சி நேரம் அதிகரிப்பு

## பொதுமக்களுக்கு ஆணையர் அழைப்பு

**கரூர், ஆக.15:** கரூர் மாநகராட்சி நீச்சல் குளத்தில் பயிற்சி காலம் அதிகரிக்கப்பட்டுள்ளது பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பாடு ஆணையர் பிரித்விராஜ் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து மாநகராட்சி ஆணையர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான நீச்சல்குளம் மாநகராட்சி ஆண்கள் பள்ளியில் கடந்த எட்டு மாதங்களாக செயல்பட்டு வருகிறது. தற்போது கூடுதல் வசதி நீச்சல் குளத்தில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அதன்படி தினமும் காலை 5 மணி முதல் மாலை 7 மணி வரை பயிற்சி காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பாக நீச்சல் குளத்தில் காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டுமே செயல்பட்டு வந்தது. உடல்நலம் மற்றும் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும நீச்சல் போட்டியில் கலந்து கொள்ளும் பொதுமக்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.70 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஆண்கள், பெண்களுக்கு தனித்தனி பயிற்சியாளர்கள் மூலம் தனித்தனியாக நீச்சல் பயிற்சி கற்றுக் கொடுக்கப்படுகிறது. மேலும் பெண்கள் பயன்பெறும் வகையில் பிரத்யேகமாக அவர்களுக்கு என்று தனி நேரம் காலை 10 மணி முதல் 11 மணி வரையும் மாலை 4 மணி முதல் 5 மணி வரையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒரு மாத பயிற்சி கட்டணம் ரூபாய் 2,500.நீச்சல் மூலம் நலம் பெறுவோம். வலிமையான சமூகத்தை உருவாக்குவோம் என்ற தாரக மந்திரத்துடன் செயல்படுகிறது.

கரூருக்கு பெருமை சேர்ப்பதுடன் கரூர் மக்கள் உடல் நலத்திற்கு ஆரோக்கியம் தரும் நீச்சல் கற்றுக்கொண்டு நீண்ட நாள் ஆரோக்கியத்துடன் வாழ மாநகராட்சி சார்பில் பொது மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



எழில்மிகு கரூர் மாநகராட்சி நீச்சல் குளத்தின் தோற்றம்.

அரவக்குறிச்சி வட்டத்தில் 19ம் தேதி

# உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம்

**கரூர், ஆக. 15:** கரூர் மாவட்ட கலெக்டர் முத்துக்குமரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டத்தில் 19.8.2026 (புதன்) காலை 9.00 மணி முதல் 20.08.2026 (வியாழன்) காலை 9.00 மணி வரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் "உங்களை தேடி உங்கள் ஊரில்" திட்டம் நடைபெற உள்ளது. இத்திட்டத்தில் பொது மக்கள் தங்களது கோரிக்கையினை மனுவாக தங்களது கிராமத்திற்கு வருகை தரும் மாவட்ட முதல் நிலை அலுவலர்களிடம் மனுவாக அளிக்கலாம் எனவும், மேலும் அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில், மாவட்ட நிலை அலுவலர்களிடம் ஆய்வு கூட்டம் நடைபெற்ற பின்பு மாவட்ட ஆட்சித் தலைவரால் பிற்பகல் 4 மணிமுதல் 6 மணி வரை பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் பெறப்படும் எனவும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும், பட்டா மாறுதல் தொடர்பான மனுக்களை 19.8.2026 (புதன்) காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை, சின்னதாராபுரம் குறுவட்டத்திற்கு, சின்னதாராபுரம் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திலும், அரவக்குறிச்சி குறுவட்டத்திற்கு, அரவக்குறிச்சி குறுவட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திலும், பள்ளப்பட்டி குறுவட்டத்திற்கு, பள்ளப்பட்டி குறுவட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திலும், முகாம்கள் நடைபெற உள்ளது. மேற்கண்ட முகாம்களில் பொது மக்கள் அனைவரும் தங்களது கோரிக்கைகளை மனுக்களாக அளித்து பயன்பெறுமாறு கரூர் கலெக்டர் தெரிவித்துள்ளார்.










கரூர் தலைமை தபால்நிலையம் அருகே

# தமிழக அரசை கண்டித்து அதிமுகவினர் ஆர்ப்பாட்டம்



கரூர் தலைமை தபால்நிலையம் அருகே நேற்று அதிமுகவினர் தவெக அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**கரூர், ஆக.15:** விவசாயிகளின் பயிர்கடனை முழுமையாக தள்ளுபடி செய்யாத தவெக அரசை கண்டித்து கரூர் மாவட்ட அதிமுக சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தலைமை தபால் நிலையம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் சின்னசாமி தலைமை வகித்தார். முன்னதாக அவைத்தலைவர் திருவிகா வரவேற்றார். மாவட்ட செயலாளர் கமலக்கண்ணன் கலந்து கொண்டு பேசினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அதிமுகவின் அனைத்து மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

விவசாயிகள் வங்கிகளில் பெற்ற பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்யாமல் அவர்களை வஞ்சித்து வருவதோடு, மேகதாது பிரச்னையில் மெத்தனம், காவிரியில் நமக்கான பங்கு நீரை உரிய முறையில் பெறுவதற்கு முயற்சி எடுக்காத தவெக பொய்க்கால அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




**இந்து சமய அறநிலையத்துறை**

## அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில்

கொன்னையூர், பொன்னமராவதி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.

### அறிவிப்பு (இரண்டாவது அழைப்பு)

இத்திருக்கோயிலில் பசலி–1436க்கான (16.07.2026 முதல் 30.06.2027 முடிய) காணிக்கை முடி சேகரம் உரிமத்திற்கான பொது ஏலம் எதிர்வரும் 28.08.2026 அன்று நண்பகல் 12.00 மணிக்கு MSTC https://www.mstcecommerce.com இணைய தளம் வழியாக கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடைபெறவுள்ளது.

| வ. எண் | இனம் | உரிமம் காலம் | ஆன்லைன் பதிவு ஆவணப் பதிவிறக்கம் & EMD செலுத்துவதற்கான கடைசி தேதி | மின்னனு ஏலம் நடைபெறும் தேதி & நேரம் | பிணை வைப்புத் தொகை (EMD) |
|---|---|---|---|---|---|
| 1. | காணிக்கை முடி சேகரம் உரிமம் | 16.07.2026 முதல் 30.06.2027 முடிய | 27.08.2026 பிற்பகல் 04.00 மணி வரை | 28.08.2026 நண்பகல் 12.00 மணி முதல் | ரூ.1,00,000/– |

- ★ பிணை வைப்புத் தொகை அடிப்படை விலையில் 1% (TNTT விதிகள், 2000ன் விதி 14ன்படி), அல்லது ரூ.1,00,000/– இவற்றில் எது அதிகமானதோ அவை ஆன்லைன் மூலம் செலுத்தப்பட வேண்டும்.
- ★ ஏற்கப்பட்ட உரிமக் கட்டணத்தில் 5% காப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும்
- ★ இ–ஏலம் செயலாக்க கட்டணம் 1.77% உரிமத் தொகையில் பொருந்தக் கூடிய சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஆகும்.
- ★ ஆணையர் அங்கீகார உத்தரவு தேதி முதல் உரிமதாரராக கருதப்படும்
- ★ காரணம் ஏதும் கூறாமல் MSTC இணையதள ஏலத்தினை ஒத்தி வைக்கவோ நிராகரிக்கவோ திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- ★ இதர நிபந்தனைகளை https://www.mstcecommerce.com இணையதளம் வழியாக தெரிந்து கொள்ளலாம்.

**ஆர்.ரஞ்சிதா**
தக்கார் / உதவி ஆணையர், புதுக்கோட்டை.

**ம.ஜெயா**
செயல் அலுவலர்

வெ.ஆ.எண் : 41/செ.ம.தொ.அ/புதுக்கோட்டை, நாள் : 14.08.2026

அரசு கல்லூரி முன்பு அதிவேகமாக செல்லும்

# டூ வீலர்களை கண்காணிக்க கோரிக்கை

**கரூர், ஆக.15:** கரூர் தாந்தோணிமலை பிரதான சாலையோரம் அரசு கலைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் இங்கு பயின்று வருகின்றனர். சாலையின் இருபுறமும் வேகத்தடை அமைக்கப்பட்டிருந்தும், சில இரண்டு சக்கர வாகன ஓட்டிகள் மாணவ, மாணவிகளை பீதிக்குள்ளாக்கும் வகையில் அதிக வேகத்தில் சென்று வருகின்றனர்.

மேலும், மாணவ, மாணவிகள் சாலையை கடந்து செல்ல முடியாத அளவில் இரண்டு சக்கர வாகன ஓட்டிகளின் செயல்பாடுகள் உள்ளது.

எனவே,போக்குவரத்து காவல்துறையினர் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா–411014. கிளை அலுவலகம் அலகு: எண்.274, 2 ஆவது தளம், காந்தி ரோடு, லக்ஷ்மிபுரம், மேற்கு தாம்பரம், சென்னை–600045, தமிழ்நாடு.

**மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை**

**பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.**

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

நிரல் (J) இல் குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்–ஏலம் மூலமாக 31.08.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

| வ. எண். | முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A) | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B) | சுவாதீன தன்மை (C) | சொத்தின் விவரம் (D) | நிர்ணய விலை (E) | முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F) | முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G) | ஏல உயர்வுத் தொகை (H) | சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I) | ஏலத் தேதி மற்றும் நேரம் (J) | தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | கடன் எண் HF0597H21100013 ரேகா (கடன்தாரர்), ராஜேஷ் சின்னய்யா (உப கடன்தாரர்) | அறிவிப்பு தேதி: 07.06.2025 மொத்த நிலுவைத் தொகை: 07.06.2025 தேதியில் செலுத்த வேண்டிய தொகை ரூ.11,14,921/– (ரூபாய் பதினொரு லட்சத்து பதினான்காயிரத்து, தொள்ளாயிரத்து இருபத்தொன்று மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 18.35% வட்டி. | கையக | புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை பதிவு மாவட்டம், கந்தர்வகோட்டை சார் பதிவு மாவட்டம், குளத்தூர் தாலுகா, மின்னத்தூர் வட்டம், நத்தம் பட்டா எண்.89, நத்தம் பழைய சர்வே எண்.597/1 பகுதி. நத்தம் புதிய சர்வே எண்.799/6 இல் 565 ச.அடி பரப்பளவு உள்ள சொத்து. அதன் நான்கு எல்லைகள்: கிழக்கில்: மாங்குடியார் கோயில் மற்றும் ராஜேஷ் சொத்து, மேற்கில்: முனியாண்டவர் கோயில் சொத்து மற்றும் சின்னய்யா சொத்து, வடக்கில்: சாலை, தெற்கில்: கிழக்கு மேற்கு சாலை. இந்த நான்கெல்லைகளுக்குள் 565 ச.அடி அல்லது 141.25 ச.மீட்டர்கள் பரப்பளவு உள்ள சொத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் அதனுடன் மின்சார வாரிய சர்வீஸ் இணைப்பு மற்றும் அதற்கு உரிய வைப்புத் தொகை மற்றும் அனைத்து நடைபாதை, பயன்பாட்டு உரிமைகள் அடங்கிய சொத்து. | Rs. 1211995.00/- (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து பதினொரு ஆயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்று ஐந்து மட்டும்) | Rs. 121199.50/- (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து ஒராயிரத்து நூற்று தொன்னூற்று ஒன்பது மற்றும் பைசா ஐம்பது மட்டும்) | 28-08-2026 Before 5 PM | 10,000/- | 24-08-2026 (11AM – 4PM) | 31-08-2026 (11 AM- 2PM) | எதுவுமில்லை |
| 8 | கடன் எண் LAP0597200000005018051 சேவியர் சத்தியநாத உடையார், (கடன்தாரர்) ஆரோக்கிய ஜிலையா பேபி சேவியர் (உப கடன்தாரர்) | அறிவிப்பு தேதி: 07.11.2024 மொத்த நிலுவைத் தொகை: 07.11.2024 தேதியின்படி ரூ.9,37,836/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து முப்பத்தேழு ஆயிரத்து எண்ணூற்று முப்பத்தாறு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 17% வட்டி. | கையக | புதுக்கோட்டை பதிவு மாவட்டம், கந்தர்வகோட்டை சார் பதிவு அலுவலகம் மற்றும் வட்டம், தச்சன்குறிச்சி கிராமம், பட்டா எண்.1569, சர்வே எண். 252/2 இல் உள்ள 2175 ச.அடி பரப்பளவு உள்ள சொத்தின் நான்கு எல்லைகள்: கிழக்கில்: இன்னாசி முத்து சொத்து, மேற்கில்: நத்தம் சொத்து, தெற்கில்: நடுத்தெருவுக்குத் தெரு செல்லும் சாலை, வடக்கில்: செபஸ்டியானின் சொத்து, இந்த நான்கு எல்லைகளுக்குள் அளவீடு: கிழக்கு மேற்காக தெற்கில்: 35 அடி, வடக்கில்: 40 அடி, வடக்கு தெற்காக கிழக்கில்: 57 அடி, மேற்கில்:59 அடி. மொத்தம் 2175 ச.அடி அல்லது 202 ச.மீட்டர் பரப்பளவு உள்ள சொத்து. இதில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் அதனுடன் மின்சார சேவை இணைப்பு மற்றும் அதன் வைப்புத் தொகை, அனைத்து நடைபாதை, பயன்பாட்டு உரிமைகள் உள்ளடங்கிய சொத்து. இந்த சொத்து புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், தச்சன்குறிச்சி பஞ்சாயத்து எல்லைக்குள் உள்ளது. | Rs. 1056038.00/- (ரூபாய் பத்து லட்சத்து ஐம்பத்தாறு ஆயிரத்து முப்பது எட்டு மட்டும்)) | Rs. 105603.80/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐந்தாயிரத்து அறுநூற்று மூன்று மற்றும் பைசா எண்பது மட்டும்) | 28-08-2026 Before 5 PM | 10,000/- | 24-08-2026 (11AM – 4PM) | 31-08-2026 (11 AM- 2PM) | எதுவுமில்லை |

**ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரலீட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ஞ்சசில் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ நிரல் (G) இல் 28.08.2026 தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள [illegible]

நாள்: 15.08.2026, இடம்: தமிழ்நாடு

ஒப்/– அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

### சுவாதீன அறிவிப்பு

## எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

CIN: U67100MH2007PLC174759

**ரீடெய்ல் சென்ட்ரல் மற்றும் பதிவு அலுவலகம்:** எடெல்வீஸ் ஹவுஸ், CST சாலை சற்று தொலைவில், கலினா, மும்பை 400098.

**பிற்சேர்க்கை IV [விதி 8(1)] - சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்கானது)**

இவ்வாறிருக்க, அதிகாரப்பூர்வ அதிகாரி பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் (சட்டம்), 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் (விதி 3) உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கோரிக்கை அறிவிப்பு வழங்கி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

அதற்குப் பிறகு கடனீட்டு கடன்தாரர் சர்ஃபாசி சட்டம், 2002 இன் பிரிவு 5 கீழ் செய்து கொண்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தத்தினை பின்பற்றி இஏஆர்சி பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் சொந்த/அதன் திறனில் செயல்படும் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடுக்கு (நிதிச் சொத்துகளை உரிமை ஒதுக்கீடு செய்துள்ளது. இஏஆர்சி ஆனது கடன்தாரரால் பெறப்பட்ட நிதி உதவி தொடர்பான கீழ்க்காணும் கடனீட்டு உரிமைகள், உத்திரவாதங்கள், அடமானங்கள் ஆகியவற்றுடன் நிதிச் சொத்துகள் தொடர்பான பிஎப்எல் இன் அனைத்து உரிமங்கள், உரிமைப்பத்திரம் மற்றும் உரிமைகள் ஆனது இஏஆர்சி–க்கு வந்தடைந்துள்ளன. மேலும் இஏஆர்சி ஆனது கடனீட்டு கடனீந்தோராக அதன் அனைத்து உரிமைகளை செயல்படுத்துகிறது.

கடன்தாரர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளதைத் தொடர்ந்து, இதன்மூலம் கடன்தாரர்(கள்), உப கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்ட எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரி சர்ஃபாசி சட்டத்தின் பிரிவு 13 இன் துணைப் பிரிவு (4) உடன் கடனீட்டு சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8 இன்படி குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்தையும் சுவாதீனம் செய்துள்ளார்

| வ. எண் | கடன் கணக்கு எண் மற்றும் கடன்தாரர்/ உப கடன்தாரர்(கள்) பெயர் | கோரிக்கை அறிவிப்புத் தேதி மற்றும் தொகை | டிரஸ்ட்-இன் பெயர் | சுவாதீன தேதி | அடையாளப்பூர்வ/ கையக சுவாதீனம் |
|---|---|---|---|---|---|
| 5 | கடன் கணக்கு எண்: LKARSTH0000039699 1) நவீன்குமார் நடராஜன் ("கடன்தாரர்"), 2) திரு.நடராஜன் பெரமா (உப–கடன்தாரர்), 3) தர்மராஜ் எம் (உத்தரவாததாரர்) | 25.05.2024 & Rs.8,49,449.56 | இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி–447மற்றும் M/s. எடெல்வீஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் | 11.08.2026 | அடையாளப்பூர்வ சுவாதீனம் |

**கடனீட்டுச் சொத்தின் விவரங்கள்:** கரூர் பதிவு மாவட்டம், வேலாயுதம்பாளையம் சார்பதிவாளர் அலுவலகம், கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நஞ்சை கடம்பங்குறிச்சி கிராமம் ஆகியவற்றில் அமைந்துள்ள சொத்து. பழைய நத்தம் சர்வே எண் 6/E மற்றும் புதிய நத்தம் சர்வே எண் 6/1 ஆகியவற்றில் அடங்கிய மொத்த பரப்பளவு 0.0347 சதுர மீட்டர் (3735.11 சதுர அடி) ஆகும்; இதில் 1056 சதுர அடி (98.11 சதுர மீட்டர்) பரப்பளவுள்ள சொத்து இதுவாகும். இதன் எல்லைகள்: கிழக்கு – K.M.விஜயகுமார் அவர்களின் சொத்து; மேற்கு – V.மருதாளன் அவர்களின் வீடு; வடக்கு – கிழக்கு–மேற்கு பொதுப் பாதை; தெற்கு – M.அன்னதுரை மற்றும் M.பாலசுப்பிரமணி ஆகியோரின் சொத்து. அளவுகள்: கிழக்கு–மேற்காக இருபுறமும் 32 அடி; வடக்கு–தெற்காக இருபுறமும் 33 அடி. இச்சொத்து நத்தம் பட்டா எண் 6 மற்றும் சர்வே எண் 6/1–ன் கீழ் வருகிறது (மொத்த பரப்பளவு 347 சதுர மீட்டர் / 3735 சதுர அடி; இதில் 1056 சதுர அடி மட்டும்). இச்சொத்தில் RCC கட்டிடம் கட்டப்படவுள்ளது. வேலாயுதம்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 19.09.2017 அன்று பதிவு செய்யப்பட்ட ஆவண எண் 920/2017–ல் உள்ள விற்பனைப் பத்திரத்தில் விவரிக்கப்பட்டுள்ளவாறு நீர் உரிமைகள், பாதை உரிமைகள் மற்றும் இதர பயன்பாட்டு உரிமைகள் (easement rights) ஆகியவற்றுடன் கூடிய சொத்து இதுவாகும்.

கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு (8) விதிமுறைகள் கடன்தாரர் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன. கடன்தாரருக்கு குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்கு பொதுவாக இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் **எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின்** வசூலுக்கு உட்படும்.

இடம்: தமிழ்நாடு
தேதி: 15.08.2026

ஒப்/– அதிகாரப்பூர்வ அலுவலர்
எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

Edelweiss Asset Reconstruction